

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | அக்டோபர்20, 2022 | புரட்சி 21 | முழக்கம் 40 | விலை: ரூ.3.00

## சிறையில் தீட்சதர்கள்

அறநிலையத் துறை சட்டம் எதற்கும் நாங்கள் கட்டுப்பட மாட்டோம்; நாங்கள் வானுலகத்திலிருந்து நடராசப் பெருமானோடு “பாரா சூட்டில்” வந்து பூமிக்கு குதித்தவர்கள் என்று உச்சநீதி மன்றம் போய் தீர்ப்பு வாங்கி வைத்துள்ளவர்கள் தில்லை தீட்சதப் பார்ப்பனர்கள்.

அரசுக்கு கோயில் உண்டியல் கணக்குக் காட்ட மாட்டோம்; தில்லை நடராசன் வந்து கேட்கட்டும் என்பார்கள். வரவு செலவு கணக்குகளை சரி பார்க்க அறநிலையத் துறை அதிகாரிகள் வந்தால் கோயிலுக்குள் வராதே; போ வெளியே ‘கெட் அவுட்’ என்பார்கள்.

இப்படித்தான் பா.ஜ.க. பார்ப்பனர் எச். ராஜாவும் அண்மையில் பத்திரிகையாளர்களைப் பார்த்து ‘கெட் அவுட்’ என்று ஆவேசமாகக் கூறினார். பிறகு தான் தெரிந்தது அவர் அப்படிக் கூறிக் கொண்டது தனக்குத் தான் என்று.

‘பிரம்மா’வால் அந்தக் கால கருத்தரிப்பு மய்யத்தில் நெற்றி வழியாகப் பிறந்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் ‘பிராமணர்’களுக்கு ‘பிறவித் திமிர்’ என்ற பண்பும் உண்டு. (விதி விலக்குகள் இருக்கலாம்).

தில்லை நடராசன் கோயிலில் ‘கனகசபை’ என்ற சிற்றம்பல மேடையில் ‘சூத்திரர்கள்’ தரிசன உரிமையையும் அண்மைக்காலமாக தீட்சதர்கள் தடுக்கிறார்களாம். “சூத்திரர்களே கெட் அவுட்” என்கிறார்கள்.

ஒரே மதத்துக்காரர்களை அதுவும் கடவுள் பக்தியுடன் தரிசனத்துக்கு வருவோரை இப்படி அவமதிக்கிறார்களே, இது என்னப்பா மதம்? என்று எச். ராஜா கேட்க மாட்டார். ‘சூத்திரர்’ அண்ணாமலையும் கேட்க மாட்டார். அந்தத் தில்லை ‘நடராசனும்’ கேட்க மாட்டான்.

இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது. இரண்டு தீட்சதர்கள் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். காலம்காலமாகக் கோயில் கட்டுப்பாடு தங்கள் குடும்பத்தை விட்டுப் போய் விடக் கூடாது என்று ‘அவாள்கள்’ உறவுகளுக்கிடையே குழந்தைத் திருமணம் (பால்ய விவாகம்) செய்து கொண்டிருக்கிறார்கள். சட்டம் எங்களை நெருங்க முடியுமா? என்று சவால் விட்டார்கள். இப்போது வசமாக மாட்டிக் கொண்டு விட்டார்கள். காவல்துறை விசாரணைக்கு தீட்சதர்களை அழைத்துப் போக வந்தது. உடனே 100க்கும் மேற்பட்டோர் சிதம்பரத்தில் சாலை மறியல் செய்து மிரட்டிப் பார்த்தார்கள். ‘பாட்சா’ பலிக்கவில்லை. கடைசியில் ‘நடராசன்’ அருளோடு இழுத்துப் போய் வண்டியில் ஏற்ற வேண்டிய நிலை!

இந்த நிலையில் கோயில்களை அரசு கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமாம், எச். ராஜாக்கள் கதறுகிறார்கள்.

கோயில்களை மட்டுமல்ல, தீட்சதர்கள், அர்ச்சகர்கள், பூதேவர்கள் அனைவரையுமே அரசியல் சட்டமோ கிரிமினல் சட்டமோ தண்டனை சட்டமோ கட்டுப்படுத்த முடியாது என்று சுப்பிரமணிய சாமியை வைத்து உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தாலும் ஆச்சரியமில்லை.

சுப்பிரமணியசாமி உச்சநீதிமன்றம் போவதைவிட இங்கேயே மதுரையிலேயே வழக்குப் போடலாம். வெற்றி வாய்ப்புகள் அதிகம் என்பது அடியேனின் யோசனை.

“சாமி”களைப் பற்றி ‘சாமி’களுக்குத் தெரியாததா என்ன?

**– கோடங்குடி மாரிமுத்து**

### உச்சநீதிமன்ற நீதிபதி டி.ஒய். சந்திரசூட் பேச்சு

# சாதியம் – ஆணாதிக்கம் – தகுதி திறமை சமூகத்தை ஒடுக்கும் கட்டமைப்புகள்



இந்தியாவின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்க இருக்கும் டி.ஒய். சந்திரசூட், சாதியம்- ஆணாதிக்கம், தகுதி திறமைக் கோட்பாடு ஆகியவை சமூகத்தை ஒடுக்கும் கட்டமைப்புகளாக இருக்கின்றன என்று கூறியுள்ளார். தேசிய சட்ட பல்கலைக் கழகத்தில் கடந்த சனிக்கிழமை (அக்.15, 2022) பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

“நாம் இப்போது சட்டம் ஆட்சி செய்யும் ஒரு சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்மை வழி நடத்தும் இந்த சட்டங்களின் இலக்கு எத்தகையதாக இருத்தல் வேண்டும்? நிச்சயமாக சட்டத்தின் விதிகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு அதன் உள்ளடக்கத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாக இருக்க முடியாது. நம்முடைய அரசியல் பண்பாடு, குடிமக்களின் பழக்கங்களோடு பொருத்திப் பார்க்க வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறை வழக்கறிஞர்களிடம் இந்தக் கண்ணோட்டம் வரவேண்டும்.

நாம் இப்போது சட்டத்தின் ஆட்சி நடக்கும் சமூகத்தில் வாழ்கிறோம். இந்தச் சமூகம் - சாதியம், ஆணாதிக்கம் - தகுதி திறமைக் கோட்பாடுகளைப் (ableism) பேசி, சமூக ஒடுக்குமுறைக் கட்டமைப்புகளாக மாற்றி வைத்துள்ளது. இந்த சமூகச் சூழலைப் புரிந்து சட்டத்தை நாம் முறையாகப் பயன் படுத்தினால், ஒடுக்கும் கட்டமைப்புகளுக்கு எதிராகப் பயன்படுத்த முடியும். சட்டம இத்தகைய இலக்கு நோக்கியதாக நடைபோட வேண்டும் என்பதே நமது விருப்பம். இதை நீங்களோ, நானோ தனி நபராக சாதிப்பது சாத்தியமற்றது. அந்த இலக்கை நோக்கி சட்டத்தைப் பயன் படுத்துவதில் நம் அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை உணர வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

டி.ஒய். சந்திரசூட், உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்து பல முக்கிய தீர்ப்புகளை வழங்கியவர். அடுத்த இரண்டு ஆண்டு காலத்துக்கு அவர் தலைமை நீதிபதி பதவியில் இருப்பார். இவரது தந்தையும் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர்.

டி.ஒய். சந்திரசூட், அண்மையில் திருமணமாகாத பெண்களுக்கு கருக்கலைப்பு உரிமை உண்டு என்ற புரட்சிகர தீர்ப்பை வழங்கினார். இராணுவத்தில் பெண்கள் நிரந்தரமாக உயர் அதிகாரிகளாக வரலாம்; தன்பால் உறவுக்கான உரிமை போன்ற தீர்ப்புகளும் அவர் தலைமை ஏற்ற அமர்வுகள் வழங்கியவையேயாகும். இந்தத் தீர்ப்புக்குப் பிறகு தான் திருநங்கைகள் விமானப் பணிப் பெண்களாக நியமிக்கப் பட்டனர். அயோத்தி ராமன் கோயில் வழக்கில் கோயில் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய 5 நீதிபதிகளடங்கிய அமர்வில் இவரும் இருந்தார். அதற்குப் பிறகு வாரணாசி மசூதி - ஒரு காலத்தில் கோயிலாக இருந்தது என்று தொடரப்பட்ட வழக்கில் இஸ்லாமியர்களை தொழுகைக்கு அனுமதிக்கக் கூடாது என்ற கோரிக்கையை இவரது தலைமையிலான அமர்வு நிராகரித்து விட்டது.

மருத்துவக் கல்லூரி மேல் பட்டப் படிப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று தி.மு.க. ஆட்சி தொடர்ந்த வழக்கில் இடஒதுக்கீடு வழங்கலாம் என்ற புரட்சிகரமான தீர்ப்பை வழங்கியது டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு தான்.

# 90% மாற்றுத் திறன் மனித உரிமை செயல்பாட்டாளருக்கு இரக்கம் காட்ட மறுக்கும் பாசிச ஆட்சி

நகர்ப்புற நக்சலைட்டுகள் என்ற முத்திரை குத்தி மனித உரிமை செயல்பாட்டாளர்களைக் கொடூரமாக நசுக்கி வருகிறது பாசிச ஒன்றிய ஆட்சி. அதில் ஒருவர்தான் டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த ஜி.என்.சாய்பாபா. 90% உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டவர். சக்கர நாற்காலிகளால் தான் அவரால் நகர முடியும். கடந்த 2014ஆம் ஆண்டிலிருந்து அவருக்கு மாவோயிஸ்டுகளுடன் தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சாட்டி மகராஷ்டிரா சிறையிலே 7 ஆண்டுகளாக அடைத்து வைத்திருக்கிறது ஒன்றிய ஆட்சி. அவருக்கான பிணை கோரி வழக்கு வந்தது. வழக்கை விசாரித்த பம்பாய் உயர்நீதிமன்றம் அவரை சிறையிலிருந்து விடுவிக்க உத்தரவிட்டது. உத்தரவு பிறப்பித்த அடுத்த சில மணி நேரங்களிலேயே மகராஷ்டிரா மாநில அரசு உச்சநீதிமன்றத்தை அணுகியது. உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு பம்பாய் நீதிமன்றத்தின் உத்தரவை இரத்து செய்து அறிவித்திருக்கிறது.

இதில் உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிற கருத்து தான் மிகவும் வியப்புக்குரிய ஒன்றாகும். “மாவோயிஸ்டுகளைப் பொறுத்தவரை அவர்கள் எவ்வளவுதான் உடல் ஊனமுற்று இருந்தாலும், அவர்களுடைய மூளை மிகவும் ஆபத்தானது. மூளை தான் அவர்களை செயல்பட வைக்கிறது. மாவோயிஸ்டுகளாக இருப்பவர்கள் வெறும் செயல்பாட்டாளர்கள் தான். அவர்களை செயல்பட வைக்கின்றவர்கள், இத்தகையவர்களின் மூளை தான். எனவே இவர்கள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட வேண்டும்” என்று நீதிபதிகள் தெரிவித்து இருக்கிறார்கள். அரசு வழக்கறிஞரான ‘துஷர் மேத்தா’ என்பவர் “இந்த UAPA சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தனிமைச் சிறையில்தான் வைக்கப்பட வேண்டும்” என்று உறுதியாக வாதிட்டு இருக்கிறார். இத்தனைக்கும் சாய்பாபா சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், “அவரை வீட்டுச் சிறையில் வைக்கலாம். வீட்டிற்கு வெளியே பாதுகாவலரை போடுங்கள், அவரது தொலைப்பேசி இணைப்பையும் துண்டித்துக் கொள்ளுங்கள், ஆனால், 90% உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்ட ஒருவரை சக்கர நாற்காலியில் நகர்ந்து கொண்டு பல்வேறு விவாதங்களுக்குட்பட்ட ஒருவரை இப்படி அடைத்து வைத்திருப்பது மனிதாபிமானத்திற்கு எதிரானது” என்ற வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

ஏற்கெனவே, பாதிரியார் ஒருவர் 86 வயதில் இதேபோல் சிறைபடுத்தப்பட்டு இறந்தே போனார். ஆக நகர்ப்புற நக்சலைட்டுகள் என்ற பெயரில் மனித உரிமைக்கு எதிரான இந்த சித்திரவதைகள் பாசிச ஆட்சியின் கொடூரத்திற்கு சரியான சான்றாகும். மனித உரிமை செயல்பாட்டாளர்கள் இவற்றிற்கு வலிமையான கண்டனக் குரலை எழுப்பியாக வேண்டும்.

தலையங்கம்

## பகுத்தறிவுப் பரப்புரைகளை ஏன் தடுக்க வேண்டும்?

நம்பிக்கைக்கும் மூட நம்பிக்கைக்கும் பெரிய இடைவெளி எதுவும் கிடையாது. இரண்டுக்கும் அடிப்படையானது அறிவியல் பகுத்தறிவு சிந்தனை மறுப்பு தான். கேரளாவில் இரண்டு பெண்கள் நரபலி தரப்பட்ட கொடுமையான செய்தி நாட்டில் பலத்த விவாதங்களை எழுப்பியிருக்கிறது. கேரளாவில் தொடர்ந்து நரபலிக் கொடுமை மாந்திரீக வாதிகளால் நடத்தப்பட்டு வருகிறது என்ற செய்திகள் வருகின்றன. வடமாநிலங்களில் ‘பில்லி சூன்யம்’ என்ற நம்பிக்கையில் பல தலித் பெண்கள் கொல்லப்படுகிறார்கள். குடும்பப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க ‘மந்திரவாதியை’ நாடிச் செல்கிறார்கள். அங்கே நகைகளையும் பணத்தையும் பறிகொடுத்து ஏமாற்றப்படுகிறார்கள். ‘பேய் பில்லி சூன்யம்’ என்ற நம்பிக்கைகளும் மண்டிக் கிடக்கின்றன.

இந்த ஆபத்தான மூடநம்பிக்கைகள் பற்றி அறிவியல் அடிப்படையில் மக்களுக்கு பகுத்தறிவுப் பரப்புரை செய்யக்கூடிய ஒரே இயக்கம் பெரியார் இயக்கம் தான். கேரளாவில் நரபலிக்குப் பிறகு தான் மக்களிடம் அறிவியல் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என்று அம்மாநில மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கை முடிவு எடுத்துள்ளது.

கடவுள் நம்பிக்கை என்பதே அறிவியலுக்கு எதிரானது தான். மூடநம்பிக்கையை எதிர்த்தால் கடவுள் நம்பிக்கையைக் குலைத்து விடுமே என்ற அச்சத்தின் காரணமாகவே மூட நம்பிக்கையை எதிர்க்கவும் கண்டிக்கவும் பலரும் தயங்கு கிறார்கள்.

மதத்தின் சடங்குகளும் கடவுளின் மீதான நம்பிக்கையும் அதற்காக செலுத்தும் காணிக்கைகளும் தங்கள் வாழ்க்கையில் வளம் செழிக்க வைக்கும். குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையின் நீட்சி தான் நரபலி, பேய், பில்லி சூன்யம், மாந்திரீக நம்பிக்கைகளும். நம்பிக்கை இருக்கலாம்; ஆனால் மூட நம்பிக்கை கூடாது என்று பேசு வோரைப் பார்க்க முடிகிறது. இரண்டுக்கும் உள்ள பிணைக்க முடியாத தொடர்பை திட்டமிட்டு மறைக்கிறார்கள்.

தலையில் தேங்காய் உடைப்பது, தீக்குழியில் இறங்குவது, உடலை கத்தியால் வெட்டிக் கெள்வது, சேறுவாரி இறைப்பது, துடைப்பத்தால் அடித்துக் கொள்வது என்று பல்வேறு வடிவங்களில் தமிழ்நாட்டில் கிராமங்களில் திருவிழாக்கள் சடங்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஊர்க் கட்டுப்பாடு, ஜாதிக் கட்டுப்பாடு இந்த நம்பிக்கைகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. மக்களிடம் பகுத்தறிவுப் பரப்புரை செய்யும் பெரியார் இயக்கம் செயல்பட விடாமல் முடக்கப்படுகிறது. காவல்துறை பகுத்தறிவுப் பரப்புரைகளை அனுமதிப்பதே இல்லை.

இதைவிடக் கொடுமை மூடநம்பிக்கையை உறுதிப்படுத்தும் திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் சமூகத்தை சீரழித்துக் கொண்டிருக்கின்றன. ஏதேனும் பகுத்தறிவுக் காட்சிகள் இடம் பெற்றால் ‘இந்துக்களைப் புண்படுத்துகிறார்கள்’ என்று கூக்குரலிடும் ஒரு கூட்டம் புதிதாக உருவாகி வருகிறது.

திராவிடர் விடுதலைக் கழகம் சில ஆண்டுகளுக்கு முன்னால், ‘நம்புங்க அறிவியலை; நம்பாதீங்க சாமியார்களை’ என்ற தலைப்பில் பரப்புரைக் கூட்டங்களை நடத்தியபோது பல ஊர்களில் பா.ஜ.க., இந்து முன்னணி எதிர்ப்பால் காவல்துறை அனுமதியே தரவில்லை. மனிதர்களை யாகத்தால் அழித்துவிட முடியும் என்று ‘சத்ரு சம்ஹார யாகம்’ என்ற யாகமே வேதத்தில் இடம் பெற்றிருக்கிறது. இராவணன் உருவத்தை தீ வைத்து எரித்தால் தீமைகளை அழிக்க முடியும் என்று மக்களை நம்ப வைக்கிறார்கள். ‘சம்ஹாரம்’ என்ற அழித்தொழிப்பு கோயில் திருவிழாக்களாக அரசு, காவல்துறை பாதுகாப்புடன் நடக்கிறது. சூத்திரர்கள் கோயில் பிரவேசத்தால் உருவான தீட்டைக் கழிக்க அவ்வப்போது வேத மந்திரங்களை ஓதி, குடமுழுக்கு நடத்தி தீட்டைக் கழிப்பதாகவும் கூறுகிறார்கள்.

நம்பிக்கைகள், பக்தி, சடங்கு என்ற அடிப்படையில் இவை அனைத்துமே மக்களின் பொதுப் புத்தியில் திணிக்கப்படு வதால் அது நரபலி, மாந்திரீகம், பெற்ற குழந்தையையே பிறந்த நேரம் சரியில்லை என்று பெற்ற தாயே கொலை செய்யும் கொடுமை என்ற எல்லை வரை நீள்கிறது.

மூடநம்பிக்கை தடுப்புச் சட்டங்கள் பல மாநிலங்களில் இருக்கின்றன. கேரளாவிலும் இருக்கிறது. தமிழ்நாட்டில் அப்படி ஒரு சட்டம் இல்லை. சட்டம் வரவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஆனால் சட்டங்களினால் மட்டுமே இதைத் தடுக்க முடியும் என்பதுகூட ஒரு மூடநம்பிக்கை தான். சட்டங்களை நாம் வரவேற்றாலும் அதைவிட மக்களிடம் பகுத்தறிவு – அறிவியல் பரப்புரையைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே முக்கியம். அதன் தேவையைத் தான், பெருகி வரும் மூடநம்பிக்கைகள் உணர்த்திக் கொண்டிருக் கின்றன.

# தி ரெட் பலூன்: ஓர் நெகிழ்ச்சியான சந்திப்பு



மாணவர்களின் கற்றல் திறன் படைப்பாற்றலை வளர்த்து எடுக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை ஒவ்வொரு மாதமும் ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு குழந்தைகள் திரைப்படங்களை திரையிடும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர் ஒருவரும் அழைக்கப்பட வேண்டும். கடந்த அக்டோபர் 13ஆம் தேதி “தி ரெட் பலூன்” என்ற பிரெஞ்சு திரைப்படம் அனைத்து பள்ளிகளிலும் திரையிடப்பட்டது. 34 நிமிடம் ஓடக்கூடிய இந்த மௌனப் படம் ஆஸ்கார் விருது பெற்ற ஒன்று. 1956ஆம் ஆண்டு வெளியானது.

சென்னை பெசன்ட்நகர் அண்ணா மேல்நிலைப் பள்ளியில் கல்வித்துறை அழைப்பை ஏற்று நான் (விடுதலை இராசேந்திரன்) சிறப்பு விருந்தினராக பங்கேற்றேன்.

“பள்ளி மாணவன் ஒருவனிடம் பலூன் ஒன்று கிடைக்கிறது. நூல் கயிற்றுடன் கிடைக்கும் அந்த பலூன் மீது அவனுக்கு உணர்வு பூர்வமான ஒரு ஈர்ப்பு உருவாகிறது. எங்குச் சென்றாலும் பலூனின் நூலை உயர்த்திப் பிடித்தவாறே செல்கிறான். பல்வேறு தடைகளை எதிர்ப்புகளை எதிர்கொள்கிறான். பள்ளிப் பேருந்தில் ஏற முடியாமல் நடந்தே பள்ளிக்கு செல்கிறான், வகுப்பறைக்கு செல்லும் போது பலூனை வெளியே விட்டு செல்கிறான். அவன் பள்ளியை விட்டு வரும் வரை பலூனும் காத்திருக்கிறது. பள்ளியில் பலூன் மூடுப்பனியில் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்று நடைப்பாதையில் நடந்துப் போவோரின் குடைக்குள் பலூனை பாதுகாப்பாக பிடித்துக் கொண்டு தான் மட்டும் அந்த கடும் பனியில் நனைந்து கொண்டே நடக்கிறான். ஒரு கட்டத்தில் நான் சொல்வதை நீ கேட்டே ஆக வேண்டும் என்று பலூனுக்கு அன்பான வேண்டுகோளை வைக்கிறான். பலூனும் முழுமையாக ஒத்துழைக்கிறது. வீட்டிலே அம்மா எதிர்ப்பு ; வீட்டுக்கு வெளியே பலூன் துரத்தப்படுகிறது.

துரத்தப்பட்ட பலூன் வீட்டைச் சுற்றி சுற்றி வருகிறது. ஒருகட்டத்தில் சகமாணவர் களிடம் பலூன் சிக்கிக் கொண்டு விடுகிறது. அவர்கள் அந்த பலூனை பறக்க விட்டு கல்லால் அடிக்கிறார்கள், அதில் ஓட்டை போட முயலுகிறார்கள். சிறுவன் பலூனை காப்பாற்ற ஓடிக்கொண்டே இருக்கிறான். ஒருகட்டத்தில் பலூன் சிறுவர்களால் உடைக்கப்படும் போது அது கீழே விழுகிறது. மெதுவாக அதன் உயிர்மூச்சுக்கான காற்று வெளியேறுகிறது. கடைசியில் ஒரு சிவப்பு பலூனுக்கு பதிலாக பல வண்ணங்களில் பலூன்கள் சிறுவனிடம் குவிக்கின்றன. அந்த பலூன்களுக்கிடையே குதூகலாமாக சிறுவன் பயணிக்கிறான்.” இது தான் கதை .

உண்மையான அன்பு, மற்றவர்களுக்கு உதவுதல், பாசத்தை பகிர்ந்து கொள்ளுதல் என்ற உணர்வை அற்புதமாக இணைத்து உணர்வுகளை நெகிழச் செய்கிறது. படம் முடிந்தவுடன் பார்த்த சிறார்களிடம் இருந்து பலத்த கையொலி எழுந்தது. மாணவ, மாணவிகள் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்? “பலூனை, அவன் நண்பனாகப் பார்த்தான்” என்று ஒற்றை வரியில் ஒரு சிறுவன் நறுக்குன்னு ஒரு கருத்தை தெரிவித்தான்.

இதே போல பலூனுக்கு பதிலாக வேறு ஒரு பொருளைக் கொண்டு கற்பனையாக ஒரு கதை உங்களில் யாராவது ஒருவரால் உருவாக்க முடியுமா என்று கேட்டேன். முடியும் என்று கையை உயர்த்தினான் ஒரு மாணவன். ’ஒரு பேனவை வைத்து கதை கூறாலாம் சார்’ என்றான். கல்விக்கான கருவியான பேனாவை வைத்து அதை மனிதத்துடன் இணைத்து மிக அழகான ஒரு கதையை அவன் தன்னுடைய கற்பனைத்திறனால் கட்டமைத்து கூறியபோது அனைவரும் பலத்த கரவொலி எழுப்பினர்.

நான் தொடர்ந்து பேசினேன், “சக மனிதர் மீது ஆண், பெண், ஜாதிப் பாகுபாடு இன்றி அன்பு செலுத்துங்கள். அந்த அன்பில் சமத்துவமும், சம உரிமையையும், சமத்துவப் பண்பாடும் இழையோட வேண்டும். மானுடத்திற்கு அப்பாற்பட்ட சக்திகளிடம் பக்தி காட்டுவதற்கும், அவர்களுக்கு காணிக்கை செலுத்துவதற்குமே சமூகம் நமக்கு கற்றுத் தந்திருக்கிறது. எந்தக் கடவுளும் தனக்கு காணிக்கையோ, தானமோ வேண்டும் என்று கேட்பதில்லை, மனிதருக்கு அந்த உதவிகள் போய் சேருவதே அந்த வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும். நீங்கள் நம்புகிற கடவுள் கூட அதைத்தான் விரும்புவார்” என்று விளக்கி ஒரு கதையையும் கூறி நிறைவு செய்தேன்.

ஒரு படைப்பாற்றல் மிக்கத் திரைப்படம் எத்தகைய தாக்கத்தை சிறார்களிடம் உருவாக்குகிறது என்பதை நேரில் காணும் வாய்ப்பை பெற்றேன். தமிழ்நாடு அரசின் இந்த சீரிய முயற்சிகள் தொடர வேண்டும்.

## ‘சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம்’ புவனகிரியில் பொதுக்கூட்டம்




சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம், என்ற முழக்கத்தோடு பெரியார் 144ஆவது பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம், புவனகிரி யில் 15.10.2022 அன்று மாலை 5 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தின் முதல் நிகழ்வாக ‘விடுதலைக் குரல்’ கலைக் குழுவின் பகுத்தறிவு, சாதியொழிப்பு பாடல் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட துணைத் தலைவர் செ.பிரகாஷ் வரவேற்பு கூறினார். அ. சதிசு இந்நிகழ்விற்கு தலைமையேற்றார். மாவட்ட தலைவர் அ.மதன்குமார், மாவட்ட செயலாளர் சிவகுமார், அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் அறிவழகன், மங்களூர் ஒன்றிய செயலாளர் ந.கொளஞ்சி, த.முத்துகிருஷ்ணன், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இதனையடுத்து சதானந்தம் (மு.ஒ.செயலாளர், சி.பி.எம்.), கணபதி (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்), தயாநிதி (மா.தலைவர், மக்கள் தமிழகம்), ஆசிரியர் பழனிவேல், காரல் மார்க்ஸ் (பாலா பேரவை), ஆகிய தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர். தொடர்ந்து சிறப்புரையாற்ற வருகை தந்த சௌந்திரபாண்டியன் (காங்கிரஸ்), திருமார்பன் (மாநில அமைப்புச் செயலாளர், விசிக) ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம் என்ற முழக்கத்தை வலியுறுத்தி கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். விழுப்புரம் மாவட்ட செயலாளர் பூ.ஆ.இளையரசன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். இந்நிகழ்வை மா.தலைவர், அ.ம தன்குமார் ஒருங்கிணைத்தார். பிரேம் நன்றி கூறினார்.

# நாட்டை சூறையாடும் மோடி – அதானி கூட்டு

*மோடி – அமித்ஷா – அதானி என்ற மூன்று குஜராத்திகளின் பிடிகளில் இந்தியாவின் பொருளாதாரமும் அரசியலும் சிக்கிக் கொண்டிருக்கிறது. அதானி கொள்ளைகளை விவரிக்கிறது இக்கட்டுரை.*

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பரான குஜராத்தி மார்வாடி கௌதம் அதானி, சுமார் 137 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள சொத்துக்களுடன் உலகின் மூன்றாவது பணக்காரராக முன்னேறியுள்ளார். தற்போது இவருக்கு முன்பாக டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் உரிமையாளர் எலோன் மஸ்க் மற்றும் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ் ஆகிய இருவர் முறையே முதலாவது மற்றும் இரண்டாவது இடத்தில் உள்ளனர். கடந்த பிப்ரவரி மாதம் தான் முகேஷ் அம்பானியை பின்னுக்கு தள்ளி அதானி ஆசியாவின் முதல் பணக்காரர் என்று உயர்ந்ததோடு, உலகின் முதல் 10 பணக்காரர்கள் பட்டியலில் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரிய வணிகப் பின்புலம் எதுவும் இல்லாமல், டாடா, பிர்லா போல பரம்பரை பணக்காரரும் இல்லாமல், 1988ஆம் ஆண்டு முதல் தான் வணிகம் புரியத் தொடங்கிய கௌதம் அதானியால் இத்தனை குறுகிய காலத்தில் எவ்வாறு உலக பணக்காரர் வரிசையில் மூன்றாம் இடம் பிடிக்க முடிந்தது? பள்ளி படிப்பைப் பாதியிலே இடைநிறுத்திய அவர் முகநூல் நிறுவனர் மார்க் சக்கர்பெர்க் போல எதையும் புதிதாக கண்டுபிடித்து பெரிய லாபம் அடையவும் இல்லை எனும் போது மோடி போன்ற நண்பர் ஒருவர் கிடைத்தால் எதையும் சாதிக்கலாம் என நிரூபித்து உள்ளார்.

உலக பணக்காரர்கள் வரிசையில் இடம்பிடித்த அதானி, குஜராத் முதல்வராக மோடி இருந்த காலம் முதல் அவருடன் நெருங்கிய நட்பில் இருந்து வருவதும், மோடி குஜராத் முதல்வரான பின்புதான், அதானியின் தொழிலும் வணிகமும் உயர பறக்கத் தொடங்கியது எனவும் "பில்லியனர் ராஜ்" என்ற புத்தகத்தில் ஜேம்ஸ் கிராப்ட்ரீ என்பவர் குறிப்பிடுகிறார்.

மோடியின் வணிக ஆதரவுக் கொள்கைகள் அதானியின் வணிக விரிவாக்கத்துக்கு பெரிதும் உதவின என்றால் அது மிகையல்ல. அதானியின் பல வணிக விரிவாக்கங்கள் மற்றும் தொழில் வளர்ச்சிகளே மோடியின் குஜராத் மாடலாக நமக்கு காட்டப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாமெல்லாம் நமக்கென்று ஒரு சொந்த வீடு கூட அமைத்து கொள்ள இயலாத நிலையில், தனக்கென தனியே ரயில்வே தடங்களையும், தனி மின் நிலையங்களையும் அமைத்துக் கொண்டவர் அதானி என்றால் நம்ப முடிகிறதா? ஆம், இந்தியாவிலேயே சுமார் 300கிமீ நீளத்துக்கு தனியார் ரயில் பாதைகளைக் கொண்டிருக்கும் ஒரே நிறுவனம் அதானிதான் என அவர்களின் இணையதளத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ரயில் பாதைகள், அவர்களின் துறைமுகம், சுரங்கங்கள் மற்றும் வியாபார சந்திப்புகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், சமீபத்தில் ஏலம் விடப்பட்ட 5ஜி அலைக்கற்றையை 212 கோடிக்கு வாங்கிய நிறுவனம் அதனை வாங்கிய பிற நிறுவனங்களைப் போல பொதுப் பயன்பாட்டிற்காக அல்லாமல் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு வைத்துக் கொள்ளவிருக்கிறது.

அதேபோல இந்தியாவில் மிகப் பெரிய தனியார் அனல் மின் நிலையம் வைத்திருப்பவரும் அதானி தான். குஜராத், கர்நாடகா மகாராஷ்டிரா, சத்தீஸ்கர் போன்ற பல மாநிலங்களில் 12,450 மெகா வாட் மின்சாரம் தயாரிக்குமளவு திறனைக் கொண்டுள்ளது அதானி அனல்மின் நிறுவனம். அதோடு அவர் இந்த அனல்மின் நிலையத்தின் எரிபொருள் தேவைக்காக இந்தோனேசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் நிலக்கரி சுரங்கங்களையும் நடத்தி வருகிறார். ஆஸ்திரேலியாவின் பூர்வகுடி பகுதியில் உள்ள அதானி நிலக்கரி சுரங்கத்தை எதிர்த்து பூர்வகுடி மக்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் அதானியை வெளியேற்றக் கோரி தொடர்ந்து போராடி வருகின்றனர்.

மும்பை போன்ற பெருநகரங்களில் மின்சார விநியோகத்தை மேற்கொண்டும் வருகிறது. கொரானா காலத்தில் அதிக மின்கட்டணம் வசூலித்தது குறித்து நடிகர்-நடிகைகளே புகாரளிக்கும் நிலைக்கு சென்றது குறிப்பிடத்தக்காது. அதேபோல் பல விமான நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பை அதானி நிறுவனம் பெற்றுள்ளது. திருவனந்தபுரம் விமான நிலையத்தை கேரள அரசே எடுத்து நடத்திக் கொள்ள அனுமதி கேட்டும், அது அதானி



நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது சர்ச்சையானது. இதே போல், இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள ரீயூனியன் என்ற குட்டி நாட்டில் உள்ள விமான நிலையம் அதானி கட்டுப்பாட்டில் செயல்படுதை எதிர்த்து அந்நாட்டு அரசுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் போராடுகின்றனர்.

குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தை நிர்வகிக்கும் ஒப்பந்தத்தை பெற்றபின்பு தான் அவர் வளரத் தொடங்கியுள்ளார். 2000ஆம் ஆண்டில் சிங்கப்பூர் வில்மர் நிறுவனத்துடன் இணைந்து சமையல் எண்ணெய் விற்பனை, அதைத் தொடர்ந்து 2001ல் சமையல் எரிவாயு விநியோகம், அதன் பிறகு மின்சார உற்பத்தி, இயற்கை வளங்கள், போக்குவரத்து, மின் பகிர்மானம், பாதுகாப்பு, பழங்கள், ரியல் எஸ்டேட், நிதி சேவைகள், வீட்டு கடன் சேவைகள், விமான நிலைய நிர்வாகம், மெட்ரோ ரயில் சேவை, டேட்டா சென்டர்... என எல்லாமுமாக இன்று விளங்குகிறார்.

மோடியுடனான நெருங்கிய நட்பு தான் அதானிக்கு அரசு தரப்பில் இருந்து அதிகப்படியான உதவிகள் கிடைக்க முக்கிய காரணம். அதில் முக்கியமானது குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தை நிர்வகிக்க அதானியிடம் கொடுக்கப்பட்டது. அதோடு முந்த்ரா துறைமுகத்தின் வளர்ச்சியும் மோடியின் குஜராத் மாடலின் வெற்றியாக நமக்கு காண்பிக்கப்பட்டது.

- அதானி மோடிக்கு மிகவும் விசுவாசமாக இருந்துள்ளார், இருக்கிறார். 2002ல் குஜராத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிராக நடந்த மிகப்பெரிய இனப்படுகொலையின்போது மோடி கடுமையான பொது விமர்சனத்தை எதிர் கொண்ட நிலையில், அதானி மோடிக்கு ஆதரவாக பேசியதோடு அவரை பாதுகாத்தது குறித்து வெளியான செய்திகள் குறிப்பிடத்தக்கது. மேலும், மோடி 2003இல் முன்னெடுத்த வைப்ரண்ட் குஜராத் முதலீட்டாளர்கள் மாநாட்டில் மோடி எதிர்பார்க்காத அளவில் 15,000 கோடி அளவில் அதானி முதலீடு செய்வதாக அறிவித்தார். பதிலுக்கு மோடி, முந்த்ரா துறைமுகம் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்காக 15,946.32 ஏக்கர் நிலத்தினை ஒரு சதுர மீட்டர் ரூ.1 முதல் ரூ.32 வரைக்கும் அடிமாட்டு விலைக்கு கொடுத்துள்ளார். இதில் 51% இடங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. அன்று முதல், மோடி குஜராத் முதல்வராக இருந்த போதும், இன்று இந்தியாவின் பிரதமராக இருந்த போதும், தனது அதீத நட்பை விசுவாசத்தை அதானியிடம் காட்டி வருகிறார்.

  நாட்டை சூறையாடும் மோடி - அதானி கூட்டு 2006ஆம் ஆண்டு தனது முந்த்ரா துறைமுகம் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலத்தின் 8.6% பங்குகளை விற்றதில் குறைந்தபட்சம் 200 கோடி அதானி இலாபம் அடைந்தார். இது முந்த்ரா துறைமுகத்தின் பங்குகளுக்கு குஜராத் அரசு வழங்கிய விலையை விட 14 மடங்கு அதிகமாகும்.

- 2012இல் மோடி குஜராத் முதல்வராக இருந்த போது இரண்டு முக்கிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து CAG ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டது. அது, குஜராத் அரசு பெட்ரோலிய நிறுவனத்திடமிருந்து இயற்கை எரிவாயுவை வெளி சந்தையில் வாங்கி, வாங்கிய விலையை விட குறைந்த விலைக்கு அதானி நிறுவனத்திற்கு விற்றது. இதன் மூலம் அந்நிறுவனம் 70.5 கோடி ரூபாய் லாபமடைந்தது. 2009-12 இடையே ஒப்பந்தபடி குஜராத் அரசு மின் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய மின்சாரத்தை அதானி மின் நிறுவனம் வழங்காததால் 240 கோடி தண்டம் வசூல் செய்ய வேண்டிய இடத்தில் வெறும் 79.8 கோடி மட்டுமே மோடி அரசு வசூல் செய்தது.

- அதேபோல அதானி குழுமம் முறையாக சுற்றுச்சூழல் அனுமதி பெறாமல் முந்த்ரா துறைமுகத்தில் தன் சிறப்பு பொருளாதார மண்டலத்தை விரிவாக்கம் செய்வதாக பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. ஆனால், மோடி பிரதமரான பின்பு 2014ஆம் ஆண்டு அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு (Adani Ports and SEZ Ltd) எல்லா அனுமதிகளும் எளிதாக கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

- 2014இல் நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்காக மோடி, அதானி குழும நிறுவனமான கர்னாவதி ஏவியேஷனின் EMB-135BJ Embraer விமானத்தில் பயணித்து சுமார் 150 பிரசார கூட்டங்களில் கலந்து கொண்டதாகவும், கிட்டத் தட்ட 2.4 லட்சம் கிலோ மீட்டர் பயணித்ததாகவும் டைம்ஸ் ஆஃப் இந்தியா செய்தி குறிப்பிடுகிறது. அப்போதே எதிர் கட்சிகள் இதை சுட்டிக்காட்டி விமர்சனங்களை முன்வைத்து கண்டித்துள்ளன.

- 2014இல் மோடி பிரதமரான பின், இந்திய பிரதமராக பிரிஸ்பன் நகரில் நடந்த ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். அப்போது அவருடன் அதானியும் சென்றது குறிப்பிடத் தக்கது. அதோடு ஆஸ்திரேலியாவில் அதானியின் நிலக்கரி சுரங்கத்துக்கு, ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா 1 பில்லியன் டாலர் கடன் கொடுப்பதாக அறிவித்தது என்பதை ஜி20 பயணத்தின் போதே அதானி அறிவித்தார். இத்தனைக்கும் இந்த நிலக்கரி சுரங்கத்துக்கு அனுமதி கொடுக்ககூடாது என அப்போது ஆஸ்திரேலியாவின் பல சுற்றுச் சூழல் அமைப்புகளும் மக்களும் கடுமையாக எதிர்த்த போதும் SBI வங்கி கடன் கொடுக்க முன்

(4ஆம் பக்கம்)

## போதைப் பொருள்களின் கடத்தல் மய்யம் குஜராத்

*ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைத்தபிறகு, சர்வதேச சந்தைகளில் அதிக விலை மதிப்புமிக்க போதைப் பொருட்களின் கடத்தல் அதிகமாகி இருக்கிறது. குறிப்பாக, போதைப் பொருட்கள் கடத்தலின் தலைநகரமாக குஜராத்தும் மாறி வருகிறது. கடந்தாண்டு செப்டம்பரில் முந்த்ரா துறைமுகத்திற்கு கப்பலில் கடத்தி வரப்பட்ட 3 ஆயிரம் கிலோ ஹெராயின் போதை பொருள் சிக்கியது. இதன் சர்வதேச மதிப்பு ரூ.21 ஆயிரம் கோடி. இந்தியாவில் இதற்கு முன் இந்தளவுக்கு பெரியளவில் போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது கிடையாது.*

*ஒன்றியத்தில் பாஜ ஆட்சிக்கு வந்ததில் இருந்து உலகின் மிகப் பெரிய பணக்காரராக வேகமாக வளர்ந்து வரும் தொழிலதிபரும், பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பருமான அதானிக்கு சொந்தமானது தான் இந்த முந்த்ரா துறைமுகம். இந்த துறைமுகத்தின் மூலமாக சர்வதேச நாடுகளுக்கு போதை பொருட்கள் கடத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த சம்பவத்தை தொடர்ந்து, இம்மாநில துறைமுகங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் சரக்கு கப்பல்களில் இருந்து பல கோடி மதிப்புள்ள போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவது தொடர்கதையாக இருக்கிறது. சமீபத்தில், அமரேலி மாவட்டத்தில் உள்ள பிபவாவ் துறைமுகத்தில் ரூ.450 கோடி மதிப்புள்ள 90 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது. கட்ச் மாவட்டத்தில் உள்ள கண்டலா துறைமுகத்தில் கடந்த மாதம் 260 கிலோ ஹெராயின் சிக்கியது. இதன் சர்வதேச மதிப்பு ரூ.1,300 கோடி.*

*இந்நிலையில், வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், முந்த்ரா துறைமுகத்தில் வைக்கப்பட்டு உள்ள கன்டெய்னர்களில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது. அப்போது, ஒரு கன்டெய்னரில் வைக்கப்பட்டு இருந்து ஏற்றுமதி பொருட்களுக்கு இடையே மறைத்து வைக்கப்பட்டு இருந்த 56 கிலோ கோகையன் போதை பொருள் சிக்கியது. இதன் சர்வதேச விலை ரூ.500 கோடி. கடந்தாண்டு செப்டம்பரில் ஈரானில் இருந்து வந்த சரக்கு கப்பலில் இந்த கன்டெய்னர்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த சோதனையில் இதை விட பெரியளவில் போதை பொருட்கள் சிக்கி இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், அது பற்றிய விவரங்களை தெரிவிக்க வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் மறுத்து விட்டனர்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY
PURATCHI PERIYAR MUZHAKKAM
REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பல்லடம் ஒன்றியத்தில் கழகத்தின் பரப்புரைப் பயணம்

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தந்தை பெரியாரின் 144 ஆவது பிறந்தநாள், சனாதனத்தை வேரறுக்க உறுதி ஏற்போம் என்ற முழக்கத்துடன் திருப்பூர் மாவட்டம் பல்லடம் ஒன்றியத்தில் 16.10.2022 ஞாயிறு அன்று காலை 10 மணி அளவில் துவங்கி தெருமுனை பரப்புரைக் கூட்டங்களாக மாலை வரை நடைபெற்றது.

தொடக்கமாக பல்லடம் என்.ஜி.ஆர் சாலையில் நடந்த பரப்புரைப் பயணத்திற்கு பல்லடம் நகர அமைப்பாளர் கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம், செம்பரிதி, பழனிச்சாமி ஆகிய தோழர்கள் முன்னிலை வகித்தனர் .

முதல் நிகழ்வில் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம் வரவேற்புரை ஆற்றினார், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், பொருளாளர் சு.துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். ராஜசிங்கம் நன்றி உரையாற்றினார்.

பரப்புரையின் இரண்டாவது நிகழ்வு 11 மணிக்கு வடுகுபாளையம் பகுதியில், பயணத்திற்கு பல்லடம் ஒன்றிய நகர அமைப்பாளர் கோவிந்த ராஜ் தலைமை வகித்தார்.

தி.மு.க பொறுப்பாளர் குட்டி பழனிசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, கோவை மாநகர செயலாளர் நிர்மல்குமார் கழகத்தின் பொருளாளர் சு. துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர் முத்தமிழ் நன்றி கூறினார்.

பரப்புரையின் மூன்றாம் நிகழ்வு 12.30 மணி அனுப்பட்டி பகுதியில் நடைபெற்றது. நிகழ்வுக்கு செம்பரிதி தலைமை வகித்தார். கோவை மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன் இயக்க பாடலை பாடி துவங்கி வைத்தார். திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் மாவட்ட செயலாளர் பிரகாசு, கழகத்தின் பொருளாளர் சு. துரைசாமி ஆகியோர் கருத்துரை வழங்கினர். இறுதியாக சண்முகம் நன்றி கூறினார்.

நான்காம் நிகழ்வு கரடிவாவியில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம் தலைமை வகித்தார், கோவை மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன் இயக்கப் பாடலை பாடி துவங்கி வைத்தார், திலகவதி, திருப்பூர் மாவட்டத் தலைவர் 'முகில் ராசு' தமிழ் உணர்வாளர் செந்தேவன் ஆகியோர் உரையாற்றினர். சரஸ்வதி நன்றி கூறினார்.

அய்ந்தாம் நிகழ்வு பல்லடம் லட்சுமி மில் பகுதியில மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம் தலைமை தாங்கினார். திலகவதி, திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு, கழகத்தின் பொருளாளர் சு. துரைசாமி ஆகியோர் கருத்துரை வழங்கினார். இறுதியாக ராஜசிங்கம் நன்றி உரையாற்றினார்.

இந்த பரப்புரைப் பயணத்தில், கழகத்தின் பொருளாளர் சு.துரைசாமி,திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து, அய்யப்பன், ராஜசிங்கம், மாரிமுத்து , மாநகர செயலாளர் மாதவன் ,கோவை மாநகர செயலாளர் நிர்மல் குமார், கோவை மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன், திருப்பூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ராமசாமி, திருப்பூர் மாநகரத் தலைவர் தனபால், தோழர்கள் செம்பரிதி, கோவிந்தராஜ் சண்முகம், மோகன், சரஸ்வதி, முத்தமிழ், திலகவதி, கோவை மாவட்டம் நிலா, துளசி, பெரியார் பிஞ்சு யாழிசை, பிரணவ்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.



(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தது என்றால் அவருக்கு மோடி அரசுடனான செல்வாக்கு புரியும்.

- அதேபோல முந்த்ரா துறைமுகத்திற்கு பிறகு அதானி, இந்தியாவில் சென்னை காட்டுப்பள்ளி, எண்ணூர், காரைக்கால் உள்ளிட்ட பல துறைமுகங்களை வாங்கியுள்ளார். இவ்வாறாக மோடி அவரை இந்தியாவின் மிகப் பெரிய துறைமுக முதலாளியாக்கி இருக்கிறார்.

  “இந்தியாவில் கையாளப்படும் ஒட்டுமொத்த சரக்கில் சுமார் 25 சதவீதத்தை அதானி குழும நிறுவனங்கள் கவனித்துக் கொள்வதாகவும், இந்த அளவு வருங்காலத்தில் அதிகரிக்கலாம்” எனவும் ஐடிபிஐ கேபிட்டல் நிறுவன ஆராய்ச்சி பிரிவின் தலைவர் ஏகே பிரபாகர் கூறியுள்ளார். மேலும் அவர் இந்த துறைமுகங்களைச் சார்ந்தே, மின்சாரம், மின் பகிர்மானம், ரயில்வே, சரக்குப் போக்குவரத்து, நிலக்கரி சுரங்கங்கள் என பல நிறுவனங்களை தொடங்கி அதானி தனது சாம்ராச்சியத்தை வலுப்படுத்தியதாகவும் கூறியுள்ளார். இவ்வளவுக்கும் பக்கபலமாக துணையாக நின்று அவர் சாதிக்க உதவியது மோடியும் அவரது அரசும்தான்!

- அதுமட்டுமல்லாமல் இலங்கையின் காற்றாலை மின் திட்டத்தை நேரடியாக அதானி குழுமத்திற்கு வழங்குமாறு இந்தியா பிரதமர் மோடி அழுத்தம் கொடுத்ததாக ஜனாதிபதி ராஜபக்சே தெரிவித்ததால் இலங்கை மின்சார சபையின் (CEB) தலைவர் எம்.எம்.சி. பெர்டினாண்டோ பதவி விலகி உள்ளார்.

2016இல் எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி பத்திரிகையில், பரன் ஜோய் குஹா என்பவர் அதானியின் அசாத்திய வளர்ச்சி எப்படி சாத்தியமானது என்பது பற்றியும், அரசின் கொள்கைகள் எவ்வாறு அதானிக்கு சாதகமாக இருந்தது என்பது குறித்தும், அதானி குழுமத்தின் வரி ஏய்ப்பு பற்றியும் தொடர்ந்து எழுதினார். அதை எதிர்த்து அதானி குழுமம் அவதூறு வழக்கு தொடுத்தது. இதனால் எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி பத்திரிகை அவரின் கட்டுரையை நீக்கியது. இதைத் தொடர்ந்து பரன் ஜோய் குஹா பதவி விலகியதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2009ஆம் ஆண்டில் பிரனாய் ராயின் RRPR நிறுவனம், விஷ்வபிரதான் நிறுவனத்திடம் இருந்து, 403 கோடி ரூபாய் கடன் வாங்கியிருந்தது. இந்த கடனை சுசுஞசு நிறுவனம் திரும்ப செலுத்தாத நிலையில், அதன் பங்குகள் விஷ்வபிரதான் வசம் சென்றுவிட்டது. தற்போது விஷ்வபிரதானை அதானி வாங்கியுள்ள நிலையில், மொத்தமும் அதானி குழுமம் வசம் வந்து விட்டது. மோடியை கேள்வி கேட்கும் செய்தி நிறுவனமான NDTV-யை அதானி கைப்பற்றியதின் மூலம் மோடிக்கும் அதானிக்கும் உள்ள நட்பின் உறவை புரிந்து கொள்ளலாம்.

**– மே 17 இயக்க இணையதளத்திலிருந்து**

**(அடுத்த இதழில் முடியும்)**

# பெரியார் குடும்பத் தோழர்கள் இலக்கியா–கவுதமன் ஜாதி மறுப்பு மணவிழா



திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை யின் கொள்கை பரப்புச் செயலாளர் உமா, மகள் இலக்கியாவுக்கும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் சிவராசு - மணிமேகலை இணையரின் மகன் கவுதமனுக்கும் சனாதன எதிர்ப்பு, ஜாதி மறுப்பு, சுயமரியாதை திருமணம் 02.10.2022 அன்று தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் சௌபாக்கியா மகாலில் நடைபெற்றது.

புத்தர் கலைக்குழு மற்றும் நிமிர்வு கலையகம் பறை இசை முழக்கத்துடன் விழா துவங்கியது. இவ்விழா அமைச்சர் கீதாஜீவன் தலைமையில், பார்ப்பன சனாதன சடங்குகள் எதுவுமின்றி தாலி கட்டாமல் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ள ஜாதி மறுப்பு சுயமரியாதை திருமணத்தை புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்கள் நடத்தி வைத்தார். புதிய குரல் ஓவியா நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

இணையேற்பின் வரவேற்பு நிகழ்வு, 09.10.2022 அன்று காலை கோவை விக்னேசு மகாலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேரா. சுப.வீரபாண்டியன், தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் துணைத் தலைவர் மா.உமாபதி, திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொருளாளர் துரைசாமி, திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் துணை பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயர், ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். திருமண விழா அரங்கில் இட ஒதுக்கீடு ஏன் தேவை என்பதை விளக்கும் புகைப்பட கண்காட்சியும் வைக்கப் பட்டது. தோழர்கள் உறவினர்கள் ஒவ்வொருவரும் கூர்ந்து கவனித்தனர்.

# கோவை மாநகராட்சிப் பள்ளிகளில் ஆர்.எஸ்.எஸ். சாகாவுக்கு தடை கோரி கழகம் மனு

ஆர்.எஸ்.எஸ். பயிற்சிகளுக்கு மாநகராட்சி பள்ளிகளில் அனுமதி தரக் கூடாது என்பதை வலியுறுத்தியும் அனைத்து மாநகராட்சி பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பக் கோரியும் கோவை மாநகராட்சி மேயர் கல்பனாவிடமும் மாநகராட்சி கல்விக் குழுத் தலைவர் நா.மாலதியிடமும் கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 17.10.2022 அன்று காலை 11 மணியளவில் மனு அளிக்கப்பட்டது.

மனுவை பெற்றுக்கொண்ட மேயர் நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறினார்.

தோழர்கள் நிர்மல் குமார், மாதவன், துளசி, பொன்மணி, நிலா கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th October 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN